**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,</u>**
**<u>திருவண்ணாமலை மாவட்டம்.</u>**
**<u>அசல் வழக்கு எண்.54/16</u>**

2023-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 17-ம் நாள் வாதி/பிரதிவாதி சாட்சியாகிய, திருமதி.சாந்தி, என்பவரின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 54-வது விதியின் 9-வது பிரிவின்படி திரு. எஸ்.விஜி, உதவியாளர் என்பவரால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | - திருமதி.சாந்தி, |
| வயது | - |
| தந்தை/கணவர் பெயர் | - க/பெ.திருஞானம் |
| கிராமம் | - வயலூர் |
| வட்டம் | - |
| சாதி | - |
| சமயம் | - |
| தொழில் | - |

<u>17.11.2023</u>
**<u>பி.வா.சா.2.</u>**
**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

நான் படிக்கவில்லை. வாதிகள் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. வழக்கு சொத்துக்களில் பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். குப்பன் எனக்கு மாமனார். குப்பனுக்கு 2 மனைவிகள். முதல் மனைவி பெயர் செல்வி. 2வது மனைவிதான் இவ்வழக்கில் முதல் வாதி வசந்தா. வாதிகளின் பிள்ளைகள் தான் 2 முதல் 4 வரையிலான வாதிகள். முதல் மனைவி செல்விக்கு பிறந்தவர்கள் 1 முதல் 3 பிரதிவாதிகள் மற்றும் எனது கணவர் திருஞானம் ஆகியோர்கள். 5, 6 பிரதிவாதிகள் எனது பிள்ளைகள். 7ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் கணவர். 8ம் பிரதிவாதி ஜோதி என் மாமனார் குப்பனின் தம்பி.

2) 9, 10 பிரதிவாதிகள் 8ம் பிரதிவாதியின் பிள்ளைகள். தாவா சொத்துக்கள் ஆதியில் குப்பனின் தகப்பனார் அய்யாகண்ணு என்கிற அய்யாதுரை என்பவருக்கு பாத்தியப்பட்டது. அய்யாகண்ணு உயிருடன் இருந்த காலத்தில் தாவா சொத்துக்கள் என் மாமனார் குப்பனுக்கு பாகமாக கொடுக்கப்பட்ட சொத்துக்கள். 8ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தக்கள் தவிர வேறு சொத்துக்கள் பாகமாக ஒதுக்கப்பட்டது. குப்பன் உயிருடன் இருந்த காலத்தில் வழக்கு சொத்து சம்மந்தமாக எவ்வித ஆவணமும் எழுதவில்லை.

மேற்கொண்டு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.